# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/77 - 2018 නොවැම්බර් මස 10 වැනි සෙනසුරාදා - 2018.11.10

*2096/77 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MLB/LND/LNDAQ/L1/50.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/6/2017/HW/220.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள், என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின் மாலிம்படை பிரதேச செயலகப் பிரிவின் மாலிம்படை கிராமத்தில் அமைந்துள்ளதும் முற் பிரதிப்பட இலக்கம் மாற 2744 எனும் வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 தொடக்கம் 02 வரை மேற் குறித்த காணி தென் அதிவேக நெடுஞ்சாலை (தென் பகுதி நீளம்) கருத்திற் அமைப்பு முயற்சிகள் தொடர்பாக எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது:

***01 துண்டு இல. 01***

காணியின் பெயர்: நுகதுகொடவத்த நுகதுகொட அல்லது நுகதுவ; விபரம்: வீட்டுத்தோட்டம். கலப்புப் பயிர்செய்கையைக் கொண்டது; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.6805 ஹெக்டயார்.

***02 துண்டு இல. 02***

காணியின் பெயர்: நுகதுகொடவத்த நுகதுகொட மற்றும் நுகதுவ; விபரம்: வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்செய்கையைக் கொண்டது; ஆரம்ப உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0062 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018.12.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாலிம்படை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018.12.03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,
பிரதேச செயலாளர்,
மாலிம்படை.

பிரதேச செயலகம்,
மாலிம்படை,
2018, நவெம்பர் 05.

*11 - 1053*



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.